பாராளுமன்ற வெளியீட்டுத் தொடர் இலக்கம் : 290

நிறுவனத்தின் பெயர்: போக்குவரத்து அமைச்சு

முதலாம் பகுதி : 93:00		
தொடர் இல	**குழுவால் சுட்டிக்காட்டப்பட்ட குறைபாடுகள்**	**தாபன ரீதியாக எடுக்கப்பட்ட நடவடிக்கை மற்றும் எதிர்காலத்தில் எடுப்பதற்கு எதிர்பார்க்கப்படும் நடவடிக்கை**
1	அனைத்து வாகனங்களினதும் உரிமையினை உறுதிப்படுத்துவதற்கான ஆவணங்கள் கைவசம் இல்லை	போக்குவரத்து அமைச்சின் பெயரில் பதிவு செய்யப்பட்ட அனைத்து வாகனங்களின் பதிவுச் சான்றிதழ் போக்குவரத்துப் பிரிவின் கைவசம் உள்ளது. மற்ற நிறுவனங்களிலிருந்து இந்த அமைச்சுக்கு இணைக்கப்பட்டுள்ள வாகனங்கள் தொடர்பான பதிவுச் சான்றிதழின் பிரதிகள் போக்குவரத்துப் பிரிவிடம் உள்ளது. அத்துடன் வேறு நிறுவனங்களிலிருந்து வாகனங்களை கைமாற்றும் நடவடிக்கைகள் தொடர்ந்தும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.
2	அனைத்து வாகனங்களினதும் தேசிய சின்னம் வரையப்படவில்லை.	இந்த அமைச்சின் கீழ் உள்ள ஒவ்வொரு வாகனத்திலும் தேசிய சின்னம் மற்றும் அமைச்சின் பெயரை மூன்று மொழிகளிலும் காட்டும் பெயர்ப் பலகை காட்சிபடுத்தப்பட்டுள்ளது. அதேபோன்று, தேசிய சின்னம் காட்சிபடுத்தாத வாகனங்களில், தேசிய சின்னம் காட்சிபடுத்துவதற்கு முயற்சி மேற்கொள்ளப்பட்டு வருகிறது.
3	வாகனமொன்று பாவனையிலிருந்து ஒதுக்கப்பட்டு 8 மாதத்திற்கும் குறைவான காலத்தினுள் விற்றொழிக்கப்படாமை	வாகனமொன்று பாவனையிலிருந்து ஒதுக்கப்படுவதற்கு முன்னர் கல்வி அல்லது வேறொரு நிறுவனமொன்றின் பயன்பாட்டிற்காக அதைப் பரிந்துரைக்க முடியுமா என்பதைக் கண்டறிந்து அதற்கமைய இலக்கம் 14 ஸ 0551 இலக்கம் கொண்ட வாகனத்தை யாழ்ப்பாணம் பல்கலைக்கழக பொறியியல் பட்டத்தை பயிலும் மாணவர்களின் கல்வி நடவடிக்கைகளுக்காக வழங்குவதற்கு இப்போதாகும்போது தேவையான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. அதற்காக அக்குறித்த வாகனத்தின் பதிவு இரத்து செய்யப்பட்டிருப்பதுடன் வாகனம் யாழ்ப்பாணம்

		பல்கலைக்கழகத்திலிருந்து எடுத்துச் செல்லப்பட உள்ளது.
4	ஓராண்டுக்கும் மேலாக காணப்படும் நிலுவைக் கடன் மீதிகள் தீர்க்கப்பட்டிருக்கப்படவில்லை.	இந்த அமைச்சில் பணியாற்றி ஓய்வு பெற்ற மற்றும் பணிநீக்கம் செய்யப்பட்ட அதிகாரிகளின் 3 கடன் நிலுவைகள் உள்ளன. திரு. ஏ. டப்ளியு. ஏ. யு. ஜே.அலஹகோன் - ரூ.198,138/= திரு.எச்.எம்.பண்டார - ரூ.87,600/= திருமதி.பி.டப்ளியு.எம்.பி.பொடிமெனிகே - ரூ. 121,945/= ● ஏ.டப்ளியு.ஏ.யு.ஜே. அழஹகோன் அவர்களினால் பதவி விட்டு விலகிச்செல்லும் உத்தரவுக்கு எதிராக அரசாங்க சேவை ஆணைக்குழுவிற்கு 2020.07.21 திகதி மேன்முறையீடு செய்யப்பட்டுள்ளது. அக்குறித்த மேன்முறையீடு அரசாங்க சேவை ஆணைக்குழுவின் மூலம் 2021.08.03 திகதி தள்ளுபடி செய்யப்பட்டிருப்பதுடன் இந்த தீர்ப்பை எதிர்த்து மேல்முறையீட்டாளரினால் நிருவாக மேன்முறையீடுகள் நியாயசபையில் மேன்முறையீடு செய்துள்ளார். அக்குறித்த முடிவு வரும் வரை தனிப்பட்ட கோப்பு அரசாங்க சேவை ஆணைக்குழுவுக்கு அனுப்பப்பட்டுள்ளதுடன் 2022.03.09 திகதி தனிப்பட்ட கோப்பு நிருவாக மேன்முறையீடுகள் நியாயசபைக்கு அனுப்பப்பட்டது. நிருவாக மேன்முறையீடுகள் நியாயசபையினால் இது வரை வழங்கப்படவில்லை. நிருவாக மேன்முறையீடுகள் நியாயசபையினால் முடிவு வழங்கப்படும் வரை கடன் நிலுவைகள் அறவிடும் நடவடிக்கைகள் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன. ● எச்.எம்.பண்டார அவரிடமிருந்து நிலுவைக் கடன் தொகையை மீளப்பெறுவதற்காக 2018.12.14 திகதி சட்டமா அதிபருக்கு அறிவிக்கப்பட்டு,

		வழக்கிலக்கம் DMR 3212/2021 இன் கீழ் 2021.10.14 ஆம் திகதி முதல் வழக்கு தொடுக்கப்பட்டுள்ளது.அந்த வழக்கில் அழைப்பாணை விடுதல் 2023.06.27 ஆம் திகதி இடம்பெற்றதுடன் இதற்காக குற்றம் சாட்டப்பட்டவரான திரு.எச்.எம்.பண்டாரவை அவர்கக்கு தோற்றமளிக்குமாறு அறிவிக்கப்பட்டது. ஆயினும் அத்திகதி திரு.எச்.எம்.பண்டார அவர்கள் நீதிமன்றத்தில் தோற்றமளிக்கவில்லையென்பதுடன், எதிர்வரும் நீதிமன்ற நடவடிக்கைகள் தொடர்பான அறிவுறுத்தல்கள் சட்டமா அதிபர் திணைக்களத்தினால் எழுத்து மூலம் அறிவிக்கப்படும் என வழக்கு விசாரணை தினத்தன்று வாய்மொழியாக அறிவிக்கப்பட்டது.
		● திருமதி பி. டபிள்யூ. எம்.பி. பொடிமெனிக்கா அவர்கள் பதவி நீக்கம் குறித்து நிருவாக மேன்முறையீடுகள் நியாயசபை அதிகாரசபைக்கு மேன்முறையீடு செய்துள்ளதுடன், திருமதி பி. டபிள்யூ. எம்.பி. பொடிமெனிக்கா அவர்கள் நிருவாக மேன்முறையீடுகள் நியாயசபை அதிகாரசபையின் முன்னிலையில் தொடர்ச்சியாக 03 தடவைகள் தோற்றமளிக்காததன் காரணமாக மேற்படி மேன்முறையீடு நிருவாக மேன்முறையீடுகள் நியாயசபை அதிகாரசபையினால் 2023.06.14 திகதி தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது. மேலும் கடன் நிலுவைத் தொகையை செலுத்த அமைசநின் மூலம் வழங்கியிருந்த காலஅவகாசம் 2023.06.30 அன்று முடிவடைந்தது.அதற்கமைய, 2023.08.10 திகதிய நிலுவையில் உள்ள கடன் மீதியை அறவிடுவதற்காக சட்டமா அதிபர் திணைக்களத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. இதேவேளை, திருமதி

		பி.டபிள்யூ.எம்.பி.பொடிமெனிக்கே தலா ரூ.1000/= செலுத்துவதற்கு 2023.10.10 திகதியன்று அனுமதி கோரிய போதிலும், அதற்கான அனுமதியை அமைச்சு வழங்கவில்லை. இதன்படி, சட்டமா அதிபர் திணைக்களத்தின் மூலம் கடன் மீதியை அறவிடுவது தொடர்பான மேலதிக நடவடிக்கைகளை மேற்கொள்ளவுள்ளது.
5	நி.பி 371 இன் பிரகாரம் அங்கீகரிக்கப்பட்ட எல்லையை மீறி பணி குறித்த இடைக்கால கட்டு நிதி வழங்கப்பட்டிருந்தன.	நி.பி.371 என்ற எல்லைக்குள் இடைக்கால கட்டுநிதிகள் வெளியிடப்படுகின்றன.
6	அங்கீகரிக்கப்பட்ட உச்ச வரம்பை மீறும் வகையில் பணியாட்டொகுதியினர் இணைக்கப்பட்டு அல்லது ஆட்சேர்ப்பு செய்யப்பட்டுள்ளார்கள்.	2021 மற்றும் 2022 ஆம் ஆண்டுகளில், அப்போதைய அரசாங்கக் கொள்கைகளின்படி, சுமார் 50,000 பட்டதாரிகள் அரச சேவைக்கு ஆட்சேர்ப்பு செய்யப்பட்டனர். இவ்வாறு ஆட்சேர்ப்பு செய்யப்பட்ட பட்டதாரிகளில் அமைச்சின் கோரிக்கைக்கு அமைவாக சுமார் 55 அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் இந்த அமைச்சுக்கு நியமிக்கப்பட்டனர். அமைச்சின் கீழுள்ள வீதிப் பாதுகாப்பு தொடர்பான தேசிய சபையின் ஊடாக், மாவட்டச் செயலகங்களுக்கு இணைப்பதற்காக இவ்வாறு அபிவிருத்தி உத்தியோகத்தர்கள ஆட்சேர்ப்பு மேற்கொள்ளப்படுவதுடன், எனவே அங்கீகரிக்கப்பட்ட பணியாளர் வரம்பு மீறப்பட்டது. எவ்வாறாயினும், 2023 ஆம் ஆண்டில், முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் மூலம் 2023.03.14 திகதி, போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சுக்காக 2023 ஆம் ஆண்டு முதல் அங்கீகரிக்கப்பட்ட ஊழியர்களின் எண்ணிக்கைக்கு மட்டுமே அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் சேவையில் ஈடுபட்டுள்ளனர். அதற்கமைய தற்போது அங்கீகரிக்கப்பட்ட வரம்பிற்குள் பதவியணி கொண்டு நடாத்தப்படுகின்றது.

இரண்டாம் பகுதி: 63.00		
7	**குழுவால் சுட்டிக்காட்டப்பட்ட குறைபாடுகள்**	**தாபன ரீதியாக எடுத்த நடவடிக்கைகள் மற்றும் எதிர்காலத்தில் எடுக்கப்படும் என எதிர்பார்க்கப்படும் நடவடிக்கைகள்**
8	பிரசைகள் / சேவைபெறுனர் சமவாயம் முறைப்படி தயாரிக்கப்பட்டு அமுலாக்கப்பட்டிருக்கவில்லை.	பொ.நி.சு 05/2018 இற்கமைய பிரசைகள் / சேவைபெறுனர் சமவாயம் தயாரிக்கப்பட்டு நிறைவு செய்யப்பட்டுள்ளது.
9	நிறுவனத்தின் பிரசைகள் / சேவைபெறுனர் சமவாயம் அமுலாக்கப்படுதல் பற்றி மேற்பார்வை செய்வதற்கும் மதிப்பீடு செய்வதற்குமான முறையியலொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.	தயாரிக்கப்பட்ட பிரசைகள் / சேவைபெறுனர் சமவாயத்துக்கமைய அவ்வாறான மதிப்பீட்டு முறையொன்று செயல்படுத்துவதற்குள்ளது.
10	2018 சனவரி 24 திகதி இலக்கம் 02/2018 கொண்ட பொதுநிருவாக ஏற்பாடுகளுக்கு இணங்க முறையான மனிதவளத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.	மேலும் 2022-2025 வருடத்துக்காக பொ.நி.சு 02/2018 அமைய மனிதவள அபிவிருத்தி திட்டம் இற்றையாகும்போது தயாரிக்கப்பட்டு நிறைவு செய்யப்பட்டுள்ளது.
11	தயாரிக்கப்பட்ட மனிதவள மேம்பாட்டுத் திட்டத்தில், 50% க்கும் மேற்பட்ட ஊழியர்களுக்கு ஆண்டுக்கு குறைந்தபட்சம் 12 மணி நேரத்திற்கு குறையாமல் பயிற்சி வாய்ப்பை வழங்குதல் உறுதி செய்யவில்லை.	2020 2020 முதல் 2022 வருடம் வரையிலான காலகட்டத்திற்குள் உலகிலும் இலங்கையிலும் கொவிட் தொற்றுநோய் பரவியது. அதில், 2021 ஆம் ஆண்டில், மிகவும் தீவிரமான முறையில் டெல்டா வகை உட்பட மிகக் கடுமையாக வகையினங்களின் பரவல் இடம்பெற்றது.அதன்படி, வேகமாக பரவிய கொவிட் தொற்றுநோய் காரணமாக, தூர அளவைப் பேணுதல் மற்றும் தனிப்பட்ட பாதுகாப்பு கருதி அதிகாரிகள் அலுவலகத்திற்கு சமூகமளிப்பதனை மட்டுப்படுத்தப்பட்டிருந்ததுடன் நிகழ்நிலை முறையினூடாக அலுவலகப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன.எனவே, 2021 ஆம் ஆண்டில் பயிற்சி நிகழ்ச்சிதிட்டங்களை நடத்துவதற்கும் சுகாதார

		வழிகாட்டுதல்நெறிமுறைக்கமைய இடம்பெறவில்லை.
12	ஒட்டுமொத்த பணியாட்டொகுதியும் உள்ளடங்கத்தக்கதாக செயலாற்றுகை உடன்படிக்கைகள் தயாரிக்கப்பட்டு கைச்சாத்திடப்பட்டிருக்கவில்லை.	ஒட்டுமொத்த பணியாட்டொகுதியும் உள்ளடங்கத்தக்கதாக செயலாற்றுகை உடன்படிக்கைகள் கைச்சாத்திடல்.2021 ஆம் ஆண்டில் நிலவிய கொவிட் தொற்றுநோய் காரணமாக அலுவலகங்களுக்கு வருகை தருவது மட்டுப்படுத்தியிருந்தமைக் காரணமாக, சில அதிகாரிகள் வழங்குவதில் தாமதம் செய்தாலும், இற்றையாகும்போது அனைத்து அதிகாரிகளும் முறைப்படி செயல்திறன் ஒப்பந்தங்களை வழங்குதல் இடம்பெறும்.
13	மனிதவள அபிவிருத்தித் திட்டங்களைத் தயாரிக்கவும் கொள்திறன் மற்றும் திறன் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களை அமுலாக்குவதற்கும் நிறுவனத்தில் சிரேட்ட அலுவலரொருவர் நியமிக்கப்பட்டிருக்கவில்கல.	திறன் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்காக சிரேஷ்ட அதிகாரியொருவரை நியமிப்பதன் கீழ், 2021 ஆம் ஆண்டின் கடமைப் பட்டியலுக்கமைய, சிரேஷ்ட உதவிச் செயலாளருக்கு (நிர்வாகம்) தொடர்புடைய பொறுப்புகள் ஒதுக்கப்பட்டிருந்தன.
14	நிறுவனத்தின் கணக்குகள் பற்றிய கணக்காய்வு அபிப்பிராயம் ஒப்புதலளிக்க மறுக்கின்ற அல்லது பாதகமான மட்டத்தில் நிலவியது.	நிறுவனத்தின் கணக்குகள் பற்றிய கணக்காய்வு அபிப்பிராயம் தூய்மையான கருத்துரை வரை வளர்த்துக்கொள்ளும் வகையில் கூட்டாக குறைப்பாடுகளை நிவர்த்திசெய்து செயலாற்றுவதாக தெரிவித்துக் கொள்கிறேன்.

கலாநிதி பத்துல குணவர்தன (பா.உ)

போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சர்

2024 · 04 · 14